**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2022 |
| Name | : Rameshkumar |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**04.02.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது காரத்தொழுவில் வசிக்கிறேன். அலைபேசி கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 13.10.2021ம் தேதி இரவு 09.00 – 09.30 மணியளவில் மதியழகன் வீதியில் தெரு பைப் உள்ளது அதில் எனது அம்மா மீனாட்சி தண்ணீர் பிடிக்க சென்றார் அப்போது எதிரி மஞ்சுளா தேவி தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தார். எனது அம்மா அவருக்கு பணம் கொடுத்தது சம்மந்தமாக ஏற்கனவே இருந்த முன் விரோதம் காரணமாக இருவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டுள்ளது அதில் எனது அம்மாவை கண்டாரோழி, தேவடியா என்று மஞ்சுளா தேவி திட்டி எனது அம்மாவின் ஜாக்கெட்டை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார் அப்போது நான் அந்த தெருவில் இருந்தேன். சத்தம் கேட்டு வேகமாக சென்று எனது அம்மாவை துாக்கிய போது மஞ்சுளா தேவியின் கணவர் பழனிச்சாமி பெரிய கருங்கல்லை எடுத்து என் மீது வீசினார் நான் சுதாரித்து நகர்ந்த போது எனது கழுத்தில் பட்டு கீறி எனக்கு ரத்தம் வந்தது. மஞ்சுளா தேவி ரோட்டு வேலை செய்வதற்காக போட்டு வைத்து கீழே இருந்த கட்டையை எடுத்து என்னை வலது கையில் அடித்தார். அதில் எனது வலது மணிக்கட்டில் வீக்கம் ஏற்பட்டது. சண்டை நடந்த போது

அவர்கள் வீட்டில் இருந்து ஓடி வந்த அவர்களது மகன் பாண்டிதுரை எனது உயிர்நாடியில் எட்டி உதைத்தார். இருட்டில் நான் கீழே விழுந்துவிட்டேன். மூவரும் என்னை செருப்பால் நெஞ்சில் அடித்தார்கள். மொக்கை காயம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு அருகில் உள்ளவர்கள் வந்த போது மூவரும் என்னை எப்பவா இருந்தாலும் கொன்று விடுவோம் என்று மிரட்டல் விடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள். என்னை ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு எனது அம்மா அழைத்துச் சென்றார். மறு நாள் மருத்துவனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் 3 நாட்கள் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரிகளின் மகன் பாண்டிதுரையும் என்னை அடித்ததை பற்றி சொல்லியுள்ளேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி வழக்கில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள 1 மற்றும் 2 எதிரிகளை தவிர 3வதாக ஒருவர் செயல் பற்றி சாட்சியம் அளித்துள்ளதால் அவரையும் வழக்கில் எதிரியாக சேர்க்க வேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.04 17:39:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்